003

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறை
இயற்கை விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
5 வது மட்டம்
இறுதிப் பரீட்சை – 2022
**STU5512/STU 5526**– கல்வியின் அடிப்படைகள்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 02.12.2022 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

இவ் வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி - I இன் சகல வினாக்களுக்கும் பகுதி- II இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

1. பொய்ரி (faure) அறிக்கையில் கல்வி என்ற எண்ணக்கரு "இருத்தலுக்கு கற்றல்" என வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கருதப்படுகிறது யாது? இரண்டு (02) உதாரணங்கள் தருக.
2. ரூசோவினால் முன்மொழியப்பட்டுள்ள ஐந்து (05) கல்விக் கட்டங்களைக் குறிப்பிடுக.
3. "ஆரம்ப சமூகமயமாக்கல்" என்பதனால் கருதப்படுவது யாது?
4. ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.
5. முர்டக் (Murdock) இனால் வாதிக்கப்பட்டதன்படி குடும்பத்தினால் நிகழ்த்தக்கூடிய நான்கு (04) அடிப்படைத் தொழிற்பாடுகள் எவை?
6. "முறையான கல்வி" என்ற எண்ணக்கருவை சுருக்கமாக விளக்குக.
7. கல்வி ஏன் நுகர்வாக கருதப்படுகின்றது என்பதற்கான மூன்று (03) காரணிகளை சுட்டிக்காட்டுக.
8. மீள் கல்வியின் (Recurrent Education) பிரதான எதிர்பார்ப்புகளை சுருக்கமாக விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. டொலரினால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வியின் நான்கு (04) தூண்களும் எவை? (04 புள்ளிகள்)

ii. சமநிலைமிக்க ஆளுமையிகை கட்டியெழுப்புவதில் மேற்குறிப்பிட்ட நான்கு (04) தூண்களும் எவ் வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனைக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

iii. தனிநபர் ஒருவரின் தலை (head), இதயம்(heart), கை(hand) விருத்தியில் இயற்கை கல்வி முறைமை எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது என்பதனை பரீட்சிக்குக. (08 புள்ளிகள்)

10.

i. ஜோன் டுயின் (John Dewy) மூன்று (03) கல்வி தத்துவ அம்சங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

ii. இலங்கை சூழலமைப்பில் கலைத்திட்டத்தை ஒழுங்கமைக்கும் போதும், நடைமுறைப்படுத்தும் போதும், ஜோன் டுயின் கருத்துக்கள் எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை பரீட்சிக்குக. (05 புள்ளிகள்)

iii. வாழ்க்கை சவால்களை இன்றைய சமூகம் முகம்கொடுப்பதில் பிரச்சினைகளை எதிர்கொள்வதால் பரீட்சையை சித்தியடைவதற்கு மாத்திரம் கல்வியைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் விழுமியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மேற்கூறப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுபடுகிறீரா? மூன்று (03) உதாரணங்கள் குறிப்பிட்ட விளக்குக. (10 புள்ளிகள்)

11.

i. "அறிதல் ஆட்சி" மற்றும் " எழுச்சி ஆட்சி" ஆகிய எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக.. (04 புள்ளிகள்)

ii. சமூக மாற்றத்திற்கு ஏற்ப கல்வியின் குறிக்கோள்கள் கட்டாயம் மாறவேண்டும் என்பதற்கான காரணத்தை இரண்டு (02) உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

iii. நான்கு (04) உதாரணங்களைக் குறிப்பிடுவதன் மூலம் கல்வி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைக் குறிப்பிடுவதற்கான தேவையைக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

12.

i. "சமூக அடுக்கமைப்பு" என்ற எண்ணக்கருவினை வரைவிலக்கணப்படுத்துக. (04 புள்ளிகள்)

ii. தனிநபரில் எவ் வகையில் கல்வியானது சமூக பெயர்வை ஏற்படுத்தும் என்பதனைக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

iii. பிள்ளையின் சமூகமயமாக்கலில் தொலைத்தொடர்பு சாதனங்கள் பிரதான வகிபங்கினை வகிக்கின்றது என்பதனை நீர் சிந்திக்கிறீரா நான்கு (04) காரணங்களைத் தருக. (08 புள்ளிகள்)

13.

i. சமூகமயமாக்கல் முகவர்களில் நான்கு (04) வித்தியாசமான முகவர்களை பெயரிடுக. (04 புள்ளிகள்)

ii. முறைசார் கல்வி முறையின் குறைகளை நீக்கும் வகையில் முறைசாரா கல்வி எவ்வகையில் பங்காற்றுகின்றது என்பதனை விளக்குக. (08 புள்ளிகள்)

iii. வளர்ந்தோர் கல்வியினை மேம்படுத்துவதற்கான நான்கு (04) உபாயங்களை விளக்குக. (08 புள்ளிகள்)

14. கீழ்வருவனவற்றில் இரண்டிற்கு (02) சிறுகுறிப்பு எழுதுக.

i. கல்வியும் பொருளாதார அபிவிருத்தியும்
ii. திறந்த கல்வி
iii. முறைசார் கல்வியின் பலங்கள்
iv. மகாத்மா காந்தியின் முன்மொழிவுகள்

(20 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் 100

*பதிப்புரிமை பெற்றது*